செய்தி வெளியீடு எண்: 019 நாள்: 04.01.2018

## செய்தி வெளியீடு
## “ஓகி” புயல் நிவாரண பணிகள் குறித்து
## மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு

29.11.2017 மற்றும் 30.11.2017 ஆகிய தேதிகளில் வீசிய ஓகிப் புயலினால் கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் வாழை, ரப்பர், கிராம்பு, நெல், தென்னை உள்ளிட்ட வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் 6625 எக்டர் பரப்பில், 32,966 விவசாயிகளின் வயலில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. புயலினால் பாதிப்படைந்த மாவட்டங்களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், 90 குழுக்கள் அமைக்கப்பட்டு, உடனடியாக கணக்கெடுப்புப் பணி போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 11.12.2017 அன்று ஒகி புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மீண்டும் சாகுபடிப் பணியினை மேற்கொள்ளும்பொருட்டு, சிறப்புத் தொகுப்புத் திட்டம் ஒன்றினை அறிவித்தார்கள்.

அதன் அடிப்படையில் இப்புயலினால் 33 சதவிகிதத்திற்கும் அதிகமாக பாதிப்பிற்குள்ளான பயிர்களுக்கு மாநிலப் பேரிடர் நிவாரண நிதியின் வரைமுறைப்படி, இடுபொருள் நிவாரணத்தொகையினை விரைந்து வழங்கவும், இத்தொகையினையும் சேர்த்து, வாழை பயிருக்கு எக்டர் ஒன்றுக்கு இரண்டு ஆண்டுகளில் ரூ.48,500/— முதல் 63,500/— வரையிலும், ரப்பர் மரப்பயிருக்கு மறுசாகுபடி மேற்கொள்ளவும், ரப்பர்மரப்பயிருடன், வாழை மற்றும் அன்னாசி போன்ற பயிர்களை ஊடுபயிராக சாகுபடி செய்யவும், இத்துடன் தேனீ வளர்ப்பு மேற்கொள்ளவும், எக்டர் ஒன்றுக்கு ரூ.1,00,000/—மும், கிராம்பு பயிருக்கு எக்டர் ஒன்றுக்கு ரூ.28,000/—மும் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இதர பயிர்களுக்கு, மானாவாரி பயிருக்கு ஒரு எக்டருக்கு ரூ.7,410/—ம், இறவைப் பயிருக்கு எக்டருக்கு ரூ13,500/—ம் பல்லாண்டு பயிருக்கு ரூ.18,000/—ம் மாநிலப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த இத்திட்டத்தினை விரைந்து செயல்படுத்திடவும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உடனடியாக நிவாரணம் கிடைத்திடவும், வேளாண்மைத் துறை மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் 04.01.2018 அன்று தலைமைச் செயலகத்தில் ஆய்வுக்கூட்டம் நடத்தினார்கள். இதில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் முதன்மைச் செயலாளர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை

ஆணையர் திரு.சந்திரசேகரன், இ.ஆ.ப, வேளாண்மைத் துறை இயக்குநர் திரு.வ. தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப., ஆகியோர்களும், வேளாண் மற்றும் தோட்டக்கலை துறையின் உயர் அலுவலர்களும், கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டத் தோட்டக்கலை துணை இயக்குநர்களும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் நிவாரணப்பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் புனரமைக்க அரசு அறிவித்த நிவாரணத் தொகையினை விரைந்து வழங்கவும், விவசாயிகள் மறுசாகுபடி செய்ய ஏதுவாக அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் விரைந்து வழங்கிடவும் அலுவலர்களை வலியுறுத்தினார்.

ஏற்கனவே, எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் விடுபட்ட பாதிப்பிற்குள்ளான நிலங்கள் ஏதுமிருப்பின், அதனையும் கணக்கில் எடுத்து, பதினைந்து நாட்களுக்குள் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகையை வழங்கிட நடவடிக்கை எடுக்கவும், பாரத பிரதமரின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் காப்பீடு செய்து, ஒகி புயலினால் பாதிப்படைந்த விவசாயிகளுக்கு, பயிர் இழப்பீட்டினை காப்பீட்டு நிறுவனங்களிடமிருந்து விரைந்து பெற்றுத் தருவதற்கான உரிய நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டுமெனவும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் வேளாண் துறை உயர் அலுவலர்களைக் கேட்டுக் கொண்டார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**